Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month **6 Pages** 


# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

**AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION**

Film - 19 JANUARY 2024 Click - 10 Re. 1


**75வது குடியரசு தின நல்வாழ்த்துக்கள்**

**- CVPA**

## மிக்ஜாம் புயலின் போது மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கு உதவிய மாநில சங்கம். CVPAக்கும் உதவிக்கரம் நீட்டியது!





மாநிலசங்கத்தின்சிறப்புபொதுக்குழுகூட்டம்திருவண்ணாமலையில் நடைபெற்றது. இப்பொதுக்குழு கூட்டத்தில் நமது மாநில சங்கத் தலைவர் சிவகுமார் அவர்கள் தலைமையிலான நிர்வாகம் சார்பாக மிக்ஜாம் புயலின் போது ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த நம் தொழில் சார்ந்த கலைஞர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டது. இந்த மாவட்ட சங்கங்களை தொடர்ந்து சென்னை மாவட்ட சங்கத்திற்கும் மூன்று கணினிகளை தந்து, பாதிக்கப்பட்ட நமது கலைஞர்களுக்கு கொடுத்து உதவுமாறு வழங்கியுள்ளது . மாநிலச் சங்க அமைப்பாளர் எஸ். சரவணன் மற்றும் மாநில மண்டல செயலாளர் கவுஸ் பாஷா ஆகியோர் முன்னிலையில் நமது மாவட்ட சங்க நிர்வாகிகளிடம் கணினியை வழங்கினார்கள். இதனைப் பெற்றுக் கொண்ட நமது மாவட்ட சங்கத்தின் தலைவர் செல்.செல்வம் அவர்களும், செயலாளர் பிரேம்குமார் அவர்களும், மாநில சங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

## திருவள்ளூர் மாவட்ட சங்கம் சார்பாக கட்டி முடிக்கப்பட்ட மினி ஹாலை மாநிலத் தலைவர் தொடங்கி வைத்தார்



திருவள்ளூர் மாவட்ட சங்கத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட மினி ஹால் திறப்பு விழா, மற்றும் பொதுக்குழுவுடன், 2024 ஆம் ஆண்டுக்கான டைரி மற்றும் காலண்டர் வெளியீட்டு விழா என முப்பெரும் விழா வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவில் மாநிலத் தலைவர் சிவக்குமார் அவர்களும், பொதுச் செயலாளர் ஸ்ரீதரன் அவர்களும், மாநில அமைப்பாளர் எஸ். சரவணன் அவர்களும், மண்டல செயலாளர் கவுஸ் பாஷா அவர்களும், முன்னாள் மாநில தலைவர் பிரேம்லால் அவர்களும் , முன்னாள் மாநில தலைவர் ஸ்ரீதர் அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு சிறப்பித்தனர். நமது சங்கத்தின் சார்பாக தலைவர் செல் .செல்வம் அவர்களும் ,செயலாளர் பிரேம்குமார் அவர்களும், பொருளாளர் ஜெயபால் அவர்களும் , பிஆர்ஓ ரவிக்குமார் அவர்களும் மற்றும் சக நிர்வாகிகளும் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு திருவள்ளூர் மாவட்ட சங்க நிர்வாகிகளுக்கு நமது சங்கத்தின் சார்பாக நினைவு பரிசு வழங்கி வாழ்த்தினார்கள்.



# CVPA மத்திய சென்னை சார்பாக கீழ்பாக்கத்தில் நடைபெற்ற லைட் ரூம் போட்டோஷாப் மற்றும் டிஜிட்டல் ஆர்ட் ஒர்க் ஷாப்பின் ஹை-லைட் காட்சிகள்

CVPA மத்திய சென்னை சார்பாக நமது சங்க உறுப்பினர்களும், இவர்களின் அடுத்த தலைமுறையினரும் பயன் பெறும் வகையில் ஒளிப்பட பயிற்றுனர், வேலைக்காரன் செந்தில் அவர்கள் நமது சங்க நிர்வாகிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இன்றைய புகைப்படக் கலைஞர்களுக்கு அவசியமான லைட்ரூம், போட்டோஷாப் மற்றும் டிஜிட்டல் ஆர்ட் ஒர்க் ஷாப் குறித்து சிறப்பான ஒர்க் ஷாப்பை நடத்தினார். மத்திய சென்னை பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான சங்க உறுப்பினர்கள் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். நமது சங்க தலைவர் செல் செல்வம், நமது சங்க செயலாளர் பிரேம்குமார், பொருளாளர் ஜெயபால் பி .ஆர் .ஓ. ரவிக்குமார் ஆகியோர் இந்த ஒர்க் ஷாப்பிற்கு முன்னிலை வகித்தார்கள். இந்த ஒர்க் ஷாப்பை சிறப்பாக அமைத்துக் கொடுத்த மத்திய சென்னை துணைத் தலைவர் வேலு அவர்களுக்கும், இணைச் செயலாளர் தனக்கோட்டி அவர்களுக்கும், இவர்களுடன் இணைந்து பணியாற்றி ஒர்க் ஷாப்பை வெற்றிகரமாக நடத்தி கொடுத்த பகுதி செயலாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டனர். மேலும் இதற்கு ஸ்பான்சராக இருந்து உதவி செய்து மதிய உணவு வழங்கிய எஸ் கே வீடியோ சீனு அவர்களுக்கும், வேலு அவர்களுக்கும், ஆர் .எஸ் வீடியோ சுந்தர் அவர்களுக்கும், சதீஷ் அவர்களுக்கும், சண்முகம் அவர்களுக்கும், ஷேடோ லோகு அவர்களுக்கும், ஜி.எம் ஆல்பம் உரிமையாளருக்கும், அருண் வீடியோஸ் உரிமையாளர் அவர்களுக்கும், தேநீர் வழங்கிய திலிப் அவர்களுக்கும், ஒர்க் ஷாப் நடத்த தேவையான எல்.இ.டி.டிவி வழங்கிய வீடியோ டைம்ஸ் மற்றும் திலீப் அவர்களுக்கும், போட்டோ சென்டர் லாசர் அவர்கள் ஒர்க் ஷாப் முழுவதையும்போட்டோஎடுத்துக்கொடுத்தார். ரகு அவர்கள் வீடியோ எடுத்து கொடுத்தார். சங்கம் சார்பாக நிதி ஒதுக்கிக் கொடுத்த நமது சங்க தலைவர் மற்றும் செயலாளருக்கும் மத்திய சென்னை உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.















# CVPA தென் சென்னை எஸ்- 1,சார்பாக வடபழனியில் நடைபெற்ற லைட் ரூம் போட்டோஷாப் மற்றும் டிஜிட்டல் ஆர்ட் ஒர்க் ஷாப்பின் ஹைலைட் காட்சிகள்












CVPA தென் சென்னை எஸ்-1 சார்பாக நமது சங்க உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் ஒளிப்பட பயிற்றுனர், வேலைக்காரன் செந்தில் அவர்கள் நடத்திய லைட்ரூம், போட்டோஷாப் மற்றும் டிஜிட்டல் ஆர்ட் ஒர்க் ஷாப் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. எஸ்-1 பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான நமது சங்க உறுப்பினர்களும், அவர்கள் இல்லத்தின் அடுத்த தலைமுறையினரும் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். நமது சங்க தலைவர் செல் செல்வம் , நமது சங்க செயலாளர் பிரேம்குமார், பொருளாளர் ஜெயபால், பிஆர்ஓ. ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒர்க் ஷாப் நடைபெற்றது .மேலும் இந்த ஒர்க் ஷாப்பை சிறப்பாக ஏற்பாடு செய்து கொடுத்த எஸ்-1 துணைத் தலைவர் சீனிவாசன், இணைச் செயலாளர் செந்தில்குமார், ஆகியோருக்கும் இவர்களுடன் இணைந்து பணியாற்றிய தென் சென்னை பகுதியின் பகுதி செயலாளர்களுக்கும், தென் சென்னை எஸ்1 பகுதி உறுப்பினர்கள் சார்பாக அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. இவர்களை தவிர இந்த நிகழ்ச்சி சிறப்பாக அமைய, ஸ்பான்சர்ராக இருந்து உதவி செய்த மாநில சங்க அமைப்பாளர் எஸ். சரவணன் அவர்களுக்கும், தானாக முன்வந்து சங்க உறுப்பனர்களுக்கு மதிய உணவு வழங்கி உதவி செய்த மோகன்ராஜ் அவர்களுக்கும், சைதாப்பேட்டை கண்ணன் அவர்களுக்கும், சம்பத் அவர்களுக்கும் , நிகழ்ச்சியை போட்டோ எடுத்துக் கொடுத்த சசி அவர்களுக்கும், ஒர்க் ஷாப்பிற்கு தேவையான டிவி டிஸ்ப்ளே வழங்கிய நமது சங்க செயற்குழு உறுப்பினர் வீரபாண்டி அவர்களுக்கும் , மூன்று பகுதி ஒர்க் ஷாப்புக்கும் அறுசுவை உணவு வழங்கிய நமது சங்கத்தின் பகுதி செயலாளர் ராஜன் அவர்களுக்கும், ஒர்க் ஷாப் நடைபெற பி.எம்.ஆர் பான்கியூட் ஹாலை முன்னின்று ஏற்பாடு செய்து கொடுத்த வடபழனி பகுதி செயலாளர் மோகன் அவர்களுக்கும் அதன் உரிமையாளருக்கும், ஒர்க் ஷாப் நடத்த சங்கம் சார்பாக நிதி ஒதுக்கி கொடுத்த தலைவர் மற்றும் செயலாளருக்கும் தென் சென்னை எஸ் - 1 பகுதி சங்க உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

# CVPA தென் சென்னை எஸ்- 2 பகுதியின் வேளச்சேரியில் நடைபெற்ற லைட் ரூம், போட்டோஷாப், டிஜிட்டல் ஆர்ட் ஒர்க் ஷாப் ஹை-லைட் காட்சிகள்



























CVPA தென் சென்னை எஸ்-2 சார்பாக நமது சங்க உறுப்பினர்களும், இவர்களின் அடுத்த தலைமுறையினரும் பயன் பெறும் வகையில் ஒளிப்பட பயிற்றுனர், வேலைக்காரன் செந்தில் அவர்கள் லைட்ரூம், போட்டோஷாப் மற்றும் டிஜிட்டல் ஆர்ட் ஒர்க் ஷாப் குறித்து சிறப்பான ஒர்க் ஷாப்பை நடத்தினார். எஸ்-2 பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான சங்க உறுப்பினர்கள் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். நமது சங்க தலைவர் செல் செல்வம், நமது சங்க செயலாளர் பிரேம்குமார் , பொருளாளர் ஜெயபால் பி ஆர் ஓ ரவிக்குமார் இந்த ஒர்க் ஷாப்பிற்கு முன்னிலை வகித்தார்கள். இந்த ஒர்க் ஷாப்பில் கலந்து கொண்ட மாநில சங்கத்தின் அமைப்பாளர் சரவணன் அவர்களும் ,மாநில சங்கத்தின் மண்டல செயலாளர் கவுஸ் பாட்ஷா அவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.இந்த ஒர்க் ஷாப்பை சிறப்பாக அமைத்துக் கொடுத்த எஸ்-2 துணைத் தலைவர் ஜெயக்குமார் அவர்களுக்கும் , இணைச் செயலாளர் சக்தி அவர்களுக்கும், தென் சென்னை பகுதியில் இவர்களுடன் இணைந்து பணியாற்றிய பகுதி செயலாளர்கள் பேருதவி புரிந்து , ஒர்க் ஷாப்பை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர். இவர்களை தவிர இந்த நிகழ்ச்சிக்கு ஸ்பான்சராக இருந்து உதவிய மாநிலச் சங்க அமைப்பாளர் எஸ் சரவணன் அவர்களுக்கும், வேளச்சேரி போட்டோ லேண்ட் கலர் லேப் உரிமையாளருக்கும், எல் இ டி வழங்கிய வேளச்சேரி சரவணன் அவர்களுக்கும், டிவி வழங்கிய மடிப்பாக்கம் பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், போட்டோ எடுத்த நமது சங்க செயற்குழு உறுப்பினர் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் ,தேநீர் வழங்கிய பத்மா ஸ்டுடியோ உரிமையாளருக்கும், ஸ்னாக்ஸ் மற்றும் காரம் வழங்கிய அன்பு ஸ்டுடியோ உரிமையாளருக்கும், சங்கம் சார்பாக நிதி வழங்கிய தலைவர் மற்றும் செயலாளருக்கும் தென் சென்னை எஸ் - 2 உறுப்பினர்கள் சார்பாக சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. நமது சங்க நிர்வாகிகள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் ஒர்க் ஷாப் நடத்த அனுமதி வழங்கிய முன்னாள் மேயர் சைதை துரைசாமி அவர்களை நமது சங்கத் தலைவர் செல் செல்வம் அவர்களும், துணைத் தலைவர் ஜெயக்குமார் அவர்களும் இணைச் செயலாளர் சக்தி அவர்களும் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து நமது சங்கத்தின் சார்பாக நினைவுப் பரிசும் 2024 ஆம் ஆண்டுக்கான டைரியும் அவருக்கு வழங்கப்பட்டது.

## நமது சங்க அலுவலகத்தில் குடியரசு தின விழா









நமது சங்க அலுவலகத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு, நமது சங்கத் தலைவர் செல் செல்வம் அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இந்த நிகழ்ச்சியின் போது மாநிலச் சங்க அமைப்பாளர் எஸ். சரவணன் அவர்களும், நமது சங்க நிர்வாகிகளுடன், செயற்குழு உறுப்பினர்களும், சங்கத்தின் மூத்த கலைஞர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியின் போது மாணவ மாணவியர்களுக்கு தேவையான நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.



குடியரசு தின விழாவில் கலந்து கொண்ட நமது சங்கங்கத்தின் மூத்த உறுப்பினர் வீரசிங்கம் அவர்களுடைய 84 ஆவது பிறந்தநாளை சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அவர் மீது கொண்ட மரியாதை நிமித்தமாக சங்க அலுவலகத்தில் கேக் வெட்டி அனைவரும் மகிழ்ச்சி யை பகிர்ந்து கொண்டார்கள்.



AP ஸ்டூடியோ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தை சேர்ந்த திரு. ஈஸ்வரன் அவர்கள் நமது சங்கத்தை அணுகி, ஃபியூஜி ஃபிலிம் நிறுவனத்தின் புதிய கேமராக்கள் வரவு குறித்து ஒர்க் ஷாப் நடத்த உள்ளதாகவும், இதில் நமது சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். நமது சங்கத்தின் அனுமதியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஒர்க் ஷாப்பில் ஏராளமான ஒளிப்பட கலைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். சென்னை மயிலாப்பூர் ஆர். பீ. ஆர் ரெசிடென்சியில் இந்த ஒர்க் ஷாப் நடைபெற்றது. ஃபியுஜி ஃபிலிம் நிறுவனத்தின் டெக்னிக்கல் எக்ஸ்பர்ட் திரு. சத்யா அவர்கள் நவீன கேமராக்கள் குறித்து சிறப்பான ஒர்க் ஷாப்பை நடத்தினார். நமது சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.



வடசென்னை பகுதியின் நமது சங்க உறுப்பினர், திரு. தேவராஜ் அவர்களின் மகள் ஹரிணிக்கும் இதே பகுதியை சேர்ந்த கண்ணன் (எ) பிரபுவிற்கும் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் சங்க நிர்வாகிகள் மற்றும் வடசென்னை பகுதியை சேர்ந்த சங்க உறுப்பினர்கள் நேரில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்கத்தின் முன்னாள் திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் திரு. S. ராமு அவர்கள், விஷ்வா பேட்டரி மற்றும் ஆயில் விற்பனை செய்யும் கடையை திருவல்லிக்கேணியை அடுத்த ஐஸ் ஹவுஸ் பகுதியில் புதியதாக தொடங்கியுள்ளார். இங்கு இருசக்கர வாகனம் மற்றும், நான்கு சக்கர வாகனத்திற்கு தேவையான பேட்டரி மற்றும் ஆயில் போன்றவைநியாயமானவிலையில் நமது ஒளிப்படக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் எனவும், பேட்டரி, இன்வெர்ட்டர் போன்றவைகளை வாங்கும் நமது சங்க உறுப்பினர்களுக்கு ஐந்து சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும் என ராமு அவர்கள் தெரிவித்தார். முன்னதாக இந்தக் கடையின் திறப்பு விழாவில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு திரு. ராமு அவர்களை வாழ்த்தினார்கள் திரு. ராமு அவர்கள் புதியதாக துவங்கி உள்ள வியாபாரம் வெற்றி பெற நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## நன்றி! நன்றி!! நன்றி!!!

CVPA வட சென்னையின் சார்பாக நடைபெற்ற உறுப்பினர்களுக்காக ஒர்க் ஷாப்பிற்கு ஆர்வத்துடன் முன்வந்து ஸ்பான்சர் செய்தவர்கள், நமது சங்கத்தின் பொருளாளர் திரு.கே. ஜெயபால் அவர்கள், துணைத் தலைவர் கவுஸ் பாஷா அவர்கள், இணைச் செயலாளர் பிரபா அவர்கள், வடசென்னை பகுதியின் பகுதி செயலாளர்கள், ஆவடி பாபு அவர்கள், ரிஸ்வான் அவர்கள், இளங்கோ அவர்கள், ராசி ஸ்டூடியோ ஹரி அவர்கள், மதி அவர்கள், குமார் அவர்கள், டோனி ரமேஷ் அவர்கள், பச்சையப்பன் அவர்கள், சிவா அவர்கள், விஜய் ஆகியோர் நன்கொடை வழங்கி ஒர்க் ஷாப் சிறப்பாக அமைய பேருதவியாக இருந்தனர். நமது சங்கம் சார்பாகவும், நிதியுதவியும் வழங்கப்பட்டன.

ஒர்க் ஷாப்பிற்கு தேவையான, எல்இடி டிவியை நமது சங்க உறுப்பினர் ரவிக்குமார் அவர்கள் வழங்கினார். காலையில் தேநீர், ஸ்நாக்ஸ் திரு. பிரபா அவர்கள் வழங்கினார். மாலையில் தேநீர் மற்றும் ஸ்நாக்ஸ் திரு.சுரேஷ் அவர்கள் வழங்கினார். ஒர்க்ஷாப் முழுவதையும் போட்டோ வீடியோவை திரு கிஷோர்அவர்கள் எடுத்துக் கொடுத்தார். இவர்கள் அனைவருக்கும் வடசென்னை பகுதி உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

இவண் : Cvpa

## நன்றி! நன்றி!! நன்றி!!!

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!

மிகக் குறுகிய காலத்தில் வேலைக்காரன் செந்தில் அவர்களுடைய ஒர்க் ஷாப் ஏற்பாடு செய்யப்பட்டது.நமது சங்கத்தின் நிர்வாகிகளும், பகுதி செயலாளர்களும் மகிழ்ச்சியாக தங்கள் பணியை சிறப்பாக செய்தார்கள். நமது சங்க உறுப்பினர்களின் அடுத்த தலைமுறையை சேர்ந்த இளைஞர்கள் ஆர்வத்துடன் வந்து இந்த ஒர்க் ஷாப்பில் கலந்து கொண்டதை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆர்வத்துடன் ஸ்பான்சர் செய்தவர்களுக்கும், ஒர்க் ஷாப் நடத்த இடம் வழங்கியவர்களுக்கும் நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று பகுதிகளுக்கும் ஒர்க் ஷாப் நடத்திக் கொடுப்பதாக வேலைக்காரன் செந்தில் அவர்கள் நமது சங்கத்திற்கு தேதி கொடுத்தார். ஆனால் அன்றைய அவரது மனைவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மனைவியின் அறுவை சிகிச்சையின் போது உடனிருந்து கவனிக்காமல், நமக்கு கொடுத்த வாக்குறுதியின்படி, ஐந்து நாட்களுக்கும் மேலாக சென்னையில் தங்கி இந்த ஒர்க் ஷாப்பை நடத்தி முடித்து கொடுத்துள்ளார். அவருடைய கஷ்டத்தை வெளி காட்டாமல் அனைவரும் பாராட்டும்படியான ஒர்க் ஷாப்பை நடத்திக் கொடுத்துள்ளார். அவருக்கு நமது சங்கம் சார்பாக கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு : **DM. பிரேம் குமார்**, CVPA செயலாளர்

## ஏழாம் ஆண்டு நினைவு தினம்





இம்மாதம் நமது சங்கத்தின் நிறுவனரும், நீண்ட வருடங்களாக செயலாளர் பதவி வகித்த வருமான **திரு. E. இரவிச்சந்திரன்** அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினம் சங்க அலுவலகத்தில் அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி அவரது திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்திய நிகழ்வு நடைபெற்றது .

### வருந்துகிறோம்



மத்திய சென்னை , சூளை பகுதியை சேர்ந்த நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் JP ஸ்டில்ஸ் - வீடியோ உரிமையாளர். செந்தில் அவர்கள் இயற்கை எய்தினார் என்கிற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், ஒளிப்பட கலைஞர்களுக்கும், ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். நமது சங்கத்தின் சார்பாக இறுதி அஞ்சலி செலுத்திய சங்க நிர்வாகிகள், நமது சங்கத்தின் பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி, சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 30,000 அன்னாரது குடும்ப வாரிசுதாரர்களிடம், சங்க நிர்வாகிகள் மூலமாக வழங்கப்பட்டது.

- CVPA

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Mukthharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 31.01.2024

**To**